
ST DAMASUS I
POPE
December 11

## *புனித தமாசுஸ் (304 – 384)*

உரோமையில் பிறந்த இவருடைய தந்தை தம் மனைவியின் மரணத்திற்குப் பின் அல்லது அவளது சம்மதத்துடன் குருத்துவ நிலையில் சேர்ந்தார். உரோமையில் இருந்த புனித லாரென்ஸ் ஆலயத்தில் திருப்பணி புரிந்து வந்தார். அவருடைய மகனான தமாசுஸ் என்பவரும் குருப்பட்டம் பெற்று அதே கோவிலில் திருப்பணி புரிந்தார். லிபேரியுஸ் என்னும் பாப்பானவர் திருச்சபையை ஆண்டு நடத்த இவர் பேருதவி புரிந்து வந்தார். 366-ல் லிபேரியுஸ் இறந்தார். தமாசுஸ் பாப்புவாக தேர்ந்தெடுக்கப்பட்டு, பதவியேற்ற சிறிது காலத்திற்குப் பின் நேரிட்ட ஒரு நிகழ்ச்சியில் பலர் உயிர் இழந்தனர். இது உண்மையாகவே விசனத்திற்கும் வருத்தத்திற்குமுரியது. இன்னொருவர் நானே, பாப்பு என்று சொல்லிக் கொண்டு தொல்லை கொடுத்து வந்தார். அவரைப் பின்பற்றியவர்களில் சிலர் லிபேரியன் பேராலயத்தில் இருந்தார்கள். உண்மையான பாப்புவைப் பின்பற்றியவர்கள் அவர்களைப் பிடித்து சட்டத்திற்குக் கையளிக்க விரும்பினர். இதனால் ஏற்பட்ட சண்டையில் பலர் உயிரிழந்தார்கள். கடைசியாக வலந்தீனியன் பேரரசர் குறுக்கிட்டு நானே பாப்பு என்று சொல்லி வந்தவரை நாடு கடத்தி அமைதி ஏற்படுத்தினார். இந்த நிகழ்ச்சியில் சண்டை ஏற்பட்டதற்கு தமாசுஸ் காரணமல்ல என்று பழமை வாய்ந்த கிறிஸ்தவ எழுத்தாளர் அனைவரும் ஒருவாய்ப்படக் கூறுகின்றனர்.

368-ஆம் ஆண்டிலும் 370-ஆம் ஆண்டிலும் உரோமையில் தமாசுஸ் ஒரு சங்கத்தைக் கூட்டினார். இரண்டு சங்கங்களும் ஆரிய பதிதக் கொள்கைகளைக் கண்டித்தன. 374-ல் ஒரு சங்கம் நடந்தது. அது அப்பொலினாரிஸ் என்பவரது தவறான கொள்கைகளைக் கண்டித்தது. புனித எரோணிமுசுக்கு, தமாசுஸ் மீது மிகுந்த மதிப்பு உண்டு. இந்த பரிசுத்த பாப்புவின் வாழ்வின் கடைசி மூன்று ஆண்டுகளாக ஏரோணிமுஸ் இவருடைய செயலாளராக இருந்த போது ஏரோணிமுஸ் வேதாகமத்தை மொழிபெயர்க்க தமாசுஸ் ஊக்குவித்தார். இவர் உரோமையில் அநேக சீர்திருத்தங்களை ஏற்படுத்தினார். இவர் ஒரு கவிஞர். அழகாக எழுதுவார். “இவர் வேத விசுவாசத்தின் தூய்மையை ஆர்வத்துடன் காத்து வந்தார். மக்களை ஒழுக்கமுள்ளவர்களாக்க விரும்பினார். கிறிஸ்துநாதரைப் போல் தாழ்ச்சியுள்ளவர். ஏழைகள் மீது மிகுந்த இரக்கம் உள்ளவர்” என்று பழமை வாய்ந்த எழுத்தாளர்கள் கூறுகிறார்கள். பதினெட்டு ஆண்டுகளாக இவர் திருச்சபையை ஆண்டு, 384-ல் இறந்தார்.

**சிந்தனை:**

இவர் கிறிஸ்துநாதரைப் போல் தாழ்ச்சியுள்ளவர் ஏழைகள் மீது மிகுந்த இரக்கமுள்ளவர். பக்தி உள்ளவர். எனவே திருச்சபைக்கும் உலகத்துக்கும் ஏராளமான நன்மைகளைச் செய்தார்.

**செபம்:** ஆண்டவரே, எதிரிகளின் கையிலிருந்து திருச்சபையைக் காப்பாற்றும்.